### திறமையான நிர்வாகிகளை நியமித்து வெற்றி

# நூற்றாண்டு கடந்து தொடர்ந்து முன்னேறி வரும் முருகப்பா குருப் வர்த்தகம் 7 ஆண்டில் இரட்டிப்பு: சேர்மன் ஏ.வெள்ளையன் பெருமிதம்

சென்னை,ஜூலை 10–
சென்னையை தலைமையிடமாக கொண்டு 1900ம் ஆண்டில் தொடங்கப்பட்ட முருகப்பா குருப் நூற்றாண்டு கடந்து தொழில் துறையில் பல்வேறு சாதனைகள் படைத்து வருகிறது.

சைக்கிள், சர்க்கரை, உரம், சாணைக்கல் உள்ளிட்ட உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் நிதியுதவி, வீட்டு கடன், வாகன கடன் சேவை வழங்கும் நிறுவனங்கள் என 29 துறைகளில் இந்தியாவின் 13 மாநிலங்களில் இயங்கி வருகிறது இந்த முருகப்பா குழுமம். அதன் மொத்த வர்த்தகம் கடந்த 7 வருடங்களில் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

இது குறித்த ஆண்டறிக்கை வெளியிட்டு குரூப் தலைவரும், நிர்வாக இயக்குநருமான வெள்ளையன் பேசும்போது, முருகப்பா குழும நிறுவனங்களின் மொத்த வர்த்தகம் கடந்த நிதியாண்டில் ரூ.29 ஆயிரத்து 470 கோடியை எட்டியுள்ளது. இது 2014–15ஆம் ஆண்டில் ரூ.26 ஆயிரத்து 926 கோடியாக இருந்தது. 7 ஆண்டுகளுக்கு முன்பு 15 ஆயிரத்து 646 கோடியாக இருந்த குழுமத்தின் வர்த்தகம் தற்போது இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது என்றார்.

வரிக்கு முந்தைய லாபம் 6 சதவீதம் அதிகரித்து ரூ.1,880 கோடியாக உயர்ந்துள்ளது. முருகப்பா குழுமத்தின் மொத்த வருவாய் கடந்த (2015–16) நிதியாண்டில் 9 சதவீத வளர்ச்சி பெற்றுள்ளது. நடப்பு (2016 –17ம்) நிதியாண்டில் முருகப்பா குழுமம், 20% வளர்ச்சி பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.



### என்ஜினியரிங் துறையில் புதிய முயற்சி

சர்வேதேச அளவில் நீர் சுத்திகரிப்பில் தொழில் நுட்பத்தில் பிரபலமான ஜப்பான் நாட்டின் ஓரங்கோ கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் முருகப்பா குழுமத்தின் அங்கமான பொல்யூடெக் நிறுவனம் இணைந்து நீர் சுத்திகரிப்பு பணிகளை துவங்கியுள்ளது. இந்த கூட்டு நிறுவனத்தின் 59 சதவீதம் பங்குகள் முருகப்பா குழுமம் வசம் இருக்கும். எஞ்சியுள்ள 49 சதவீத பங்குகள் ஜப்பான் நிறுவனம் வசம் இருக்கும்.

இதில் பொல்யூடெக் நிறுவனம் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை அமைப்பது மற்றும் அதற்கு தேவையான கருவிகள் தயாரிக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

30 ஆண்டுகளாக இத்தொழில் ஈடுபட்டுள்ள இந்நிறுவனம் சர்க்கரை ஆலை, மருந்துப்பொருட்கள் தயாரிப்பு ஆலை, குளிர்ப்பான தயாரிப்பு ஆலை, ஜவுளி ஆலை மற்றும் ரசயான தொழிற்சாலை கழிவுகளின் கழிவுநீர் சுத்திகரிப்பில் பணிகளை மேற்கொண்டுள்ளது.

### இயற்கை வளம்

டெல்லியில் உள்ள அறிவியல், தொழில்நுட்ப துறை மற்றும் தமிழக வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மாற்றுமுறை மண் பரிசோதனை தொழில்நுட்பத்தை தொடங்கியுள்ளது. இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மண்ணில் உள்ள தழைசத்து, சாம்பல் சத்து, கால்சியம், மாங்கனீசு, சோடியம், இரும்பு, தாமிர சத்துகளை துல்லியமாக கண்டறிய முடியும்.

## டி.ஐ.சைக்கிள் நிறுவனம்

இந்தியாவின் முன்னோடி சைக்கிள் தயாரிப்பு நிறுவனமான டி.ஐ.நிறுவனம், ஹெர்குலிஸ், பி.எஸ்.ஏ., பிலிப்ஸ், உள்ளிட்ட சைக்கிள்களையும் மலையேற்ற சைக்கிள், விளையாட்டு பந்திய சைக்கிள் என சிறப்பு ரக சைக்கிள்கள் தயாரிப்பிலும் புகழ்பெற்றது.

தமிழகத்தில் சென்னை, மஹாராஷ்ட்ராவில் நாசிக், உத்திரப்பிரதேசத்தில் நொய்டா ஆகிய இடங்களில் இதன் உற்பத்தி தொழிற்சாலைகள் உள்ளன.

காருக்கு கதவுகள் தயாரிக்கும் நிறுவனமான டி.ஐ.மெட்டல் பாம்பிஸ் நிறுவனம் சென்னை, குஜராத், ஹரியானா, மஹாராஷ்ட்ரா, உத்ரகாண்ட் உள்ளிட்ட இடங்களில் செயல்பட்டு வருகிறது. இது மாருதி சுசுகி, ஹூண்டாய், ரெனலாட், நிசான், டொயோட்டோ போன்ற பன்னாட்டு நிறுவனம், டாடா, மகேந்திரா மற்றும் இந்தியாவின் ரெயில்களுக்கு கதவுகள் தயாரித்து கொடுக்கிறது. இது தவிர பிற நிறுவனங்களும் வளர்ச்சி பெற்றுள்ளன. தொடர்ந்து திறமையான நிதி, நிர்வாக நிபுணர்களை நியமித்து முருகப்பா குரூப் தமிழகத்திற்கு மட்டுமின்றி இந்தியாவிற்கே பெருமைத் தேடித்தந்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

Chola
*Enter a better life*

## சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட், பைனானஸ்

இதன் குருப் நிறுவனங்கள் குறித்து செயல்பாடுகள் குறித்து அவர் பேசுகையில் மேலும் அவர் தெரிவித்ததாவது:–

முருகப்பா குழுமத்தின் நிதி சேவை பிரிவாகவும் சோழா சாதனங்களுக்கு நிதி வழங்கும் ஒரு நிறுவனமாகவும் 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்டது சோழா நிறுவனம். இந்தியா முழுவதும் 500க்கும் மேற்பட்ட கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது.

வாகன நிதியுதவி, வீட்டுக்கடன், வாகன கடன், தொழில் கடன், முதலீட்டு ஆலோசனை சேவை, பங்கு வர்த்தக தரகு சேவை உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்குவதன் மூலம் ஒரு முழுமையான சேவை வழங்கும் நிறுவனமாக உருவாகியுள்ளது.

இதன் துணை நிறுவனங்களான சோழமண்டலம் செக்யூரிட்ஸ், சோழ இன்ஸ்வெஸ்ட்மென்ஸ் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் இயங்கி வருகிறது.

கடந்த நிதியாண்டில் சோழ இன்ஸ்வெஸ்ட்மென்ஸ் நிறுவனம் வாகனங்களுக்கு நிதியுதவி அளிப்பதில் 32 சதவீதமும், வீட்டுக்கடன் வழங்குவதில் 14 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது.

குழுமத்தின் பொதுகாப்பீட்டு துறை நிறுவனமான சோழமண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் பாலிசி பிரிமியம் 32 சதவீதமாக அதிகரித்தது. இந்த நிறுவனத்தின் 14 சதவீத பங்குகளை விற்பனை செய்ததன் மூலம் தனிப்பட்ட வருமானமாக ரூ.883 கோடி கிடைத்துள்ளது.



சேர்மன் ஏ.வெள்ளையன்

## சமூக அக்கறையில் முருகப்பா குழுமம்

'தமிழ் முதலாளி' கம்பெனி என்று அழைக்கப்படுபவரும் தமிழக தொழில்துறையின் முன்னோடிகளில் ஒருவருமான ஏ.எம்.முருகப்பா செட்டியார் நிறுவிய முருகப்பா குழுமம் தொழில்துறையில் புரட்சிகளை செய்துவருவதோடு மட்டுமல்லாது தமிழக மக்கள் சார்ந்த சமுதாயப்பணிகளிலும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக தமிழகத்தில் மழை வெள்ளம் பாதித்த மக்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதிக்காக முருகப்பா குழுமம் சார்பில் ரூ.5 கோடி வழங்கப்பட்டது.

கடந்த 2014ம் ஆண்டு சென்னையின் 375வது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் 'தி சென்னை சாங்' என்ற தலைப்பில் சென்னையின் பெருமைகளை பாடலாக வெளியிட்டது.

உழவர் திருநாளில் இந்திய விவசாயிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் உலகின் முக்கிய தொழில் விவசாயம் என்ற தலைப்பிலான பிரபல தொகுப்பாளர்கள் ரேடியோ ஜாக்கி ஆர்.ஜே.பாலாஜி, வெங்கி ஆகியோரின் கேள்வி– பதிலுடன் குறும்படத்தை வெளியிட்டது.

இளைஞர்களை விளையாட்டுத்துறையில் ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஹாக்கி, கிரிக்கெட் உள்ளிட்ட விளையாட்டுப்போட்டிகளை நடத்தி, சிறந்த வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி அங்கீகரித்திருக்கிறது.

## விவசாயத்துறை

நெல்சாகுபடியை எந்திரமயமாக்கும் கருவிகளை உற்பத்தி செய்யும் ஜப்பான் நாட்டை சேர்ந்த யான்மார் மிட்சூசி நிறுவனத்துடன் இணைந்து முருகப்பாவின் கோரமண்டல் நிறுவனம் நெல்சாகுபடி எந்திரத்தை சந்தைப்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டுகளில் 12 ஆயிரம் யூனிட்டாக இதன் விற்பனையானது தற்போது 3 ஆயிரம் யூனிட்டாக உயர்ந்துள்ளது.

கோரமண்டல் நிறுவனத்தின் 'குரோமர்' ரக உரங்களை தமிழ்நாடு, ஆந்திரா, தொலுங்கானா., கர்நாடாக ஆகிய மாநிலங்களில் 775 கிளைகள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

இதன் சில்லறை விற்பனை ரூ.1,500 கோடியாகும். வாடிக்கையாளர்களின் விருப்பதிற்கேற்ப இந்த விற்பனை கிளைகளின் எண்ணிக்கை மேலும் உயர்த்தப்படவுள்ளது.